பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 06 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உடல் ஆரோக்கியத்திற்கு யோகா முக்கிய பங்கு வகிப்பதால் உலகம் முழுவதும் யோகாவை விரிவுபடுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவில் 3 லட்சம் போர் கலந்துகொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

3. உலகமய பொருளாதாரத்திற்கு ஏற்ப, வர்த்தக மற்றும் தொழில் அமைப்புகள் தங்களது செயல்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்தியாவுடன் நீண்டகால ஒத்துழைப்புக்கான மாஸ்கோ செயல் திட்டம் விரைவில் இறுதிப்படுத்தப்படும் என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் கூறியுள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்சில் இந்தியா ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 359 ரன் எடுத்தது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

'ஒரே பூமி – ஒரே ஆரோக்கியம்' என்ற கருப்பொருளில் 191 நாடுகளில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசாகப்படடினத்தில் இன்று காலை நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு லட்சக்கணக்கான மக்களுடன் இணைந்து யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டார்.

முன்னதாக இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், யோகா தினத்தை முன்னிட்டு விண்வெளியிலும், நிலத்திலும், கடலிலும் யோகா பயிற்சி நடைபெறுவதாக தெரிவித்தார்.

கிராமங்களில் நடைபெறும் யோகா நிகழ்ச்சியிலும் பொதுமக்கள் பங்கேற்றுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகம் முழுவதும் யோகாவை விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது என்றும், இதற்கு அறிவியல் அடிப்படையிலான ஆராய்ச்சிகள் உதவி வருவதாகவும் பிரதமர் கூறினார்.

யோகாசனத்துடன் சான்றளிக்கப்பட்ட சிகிச்சை முறையையும் இந்தியா ஊக்குவித்து வருவதாகவும்,

புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் இத்தகைய சிகிச்சை வெற்றிகரமாக அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதயம் மற்றும் நரம்பியல் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிப்பதில் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமாகத் திகழ யோகா உதவுகிறது என்றும் திரு. மோடி கூறினார்.

விசாகப்பட்டினம் கடற்கரையில் 26 கிலோ மீட்டர் நீள நடைபாதையில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் 3 லட்சத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கடற்கரையை ஒட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போர்க் கப்பல்களில் கடற்படை வீரர்கள் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமருடன், ஆந்திரப்பிரதேச மாநில ஆளுநர் திரு. சையத் அப்துல் நஸீர், முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் உட்பட ஏராளமானோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்துகொண்டு யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் பாலைவனத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா கலந்துகொண்டார்.

பஞ்சாப் மாநிலம் அம்ரித்சர் - அட்டாரி எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஏராளமானோர் திரண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டனர்.

அன்றாடம் புத்துணர்ச்சியுடன் பணியாற்ற யோகா தங்களுக்கு உதவுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

பனிபடர்ந்த சியாச்சின் மலைப்பகுதியிலும், லடாக்கிலும் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் ராணுவ வீரர்கள் உற்சாகமாக கலந்துகொண்டனர்.

நாடு முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் சர்வதேச யோகா தினத்தையொட்டி பொது இடங்களில் நடைபெற்ற யோகா பயிற்சியில் சிறுவர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

யோகா தினத்தை முன்னிட்டு நேற்று விசாகப்பட்டினத்தில் உள்ள ஆந்திர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சூரிய வணக்க நிகழ்ச்சியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடியின சிறுவர் சிறுமியர் கலந்துகொண்டு 108 நிமிடங்களில் 108 சூரிய வணக்கங்களை செய்து காட்டினர்.

தலைநகர் தில்லியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க செங்கோட்டை உட்பட 109 இடங்களில் நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சியில் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகளும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ மையத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

சேலத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் மத்திய எஃகு அமைச்சர் திரு குமாரசாமி தேவகவுடா கலந்துகொண்டார்.

<<<<>>>>

உலகமயமாக்கல், வர்த்தகம், தொழில் மற்றும் விவசாயத்தை மாற்றியமைத்து வருவதால் நாடு முழுவதும் உள்ள வர்த்தக சபைகள் தங்களது செயல்பாடுகளை அதற்கேற்ப மாற்றியமைக்க வேண்டும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

மகாராஷ்டிரா மாநில தொழில், வர்த்தகம் மற்றும் வேளாண் சபையின் நூற்றாண்டு கொண்டாட்டங்களை நேற்று மும்பையில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மத்திய – மாநில அரசுகள் பொருளாதார கொள்கைகளை வகுக்கும்போது அதற்கு வர்த்தகம் மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உலகின் நான்காவது பொருளாதாரமாக இந்தியா உயர்ந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டிய திரு. அமித் ஷா, தன்னம்பிக்கை மற்றும் உறுதியான கொள்கை முடிவுகளே இந்த வெற்றிக்கு காரணம் என்று கூறினார்.

<<<<>>>>

மேற்காசியாவில் பதற்ற நிலை நீடிப்பதால் ஈரானில் இருந்து 517 இந்தியர்கள் பத்திரமாக இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஈரானில் வான்பரப்பு மூடப்பட்டுள்ளதால் அந்நாட்டின் அண்டை நாடான துர்க்மெனிஸ்தானில் இருந்து சிறப்பு விமானம் மூலம் இந்தியர்கள் புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

ஆபரேஷன் சிந்து என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் இந்த மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்றிரவு 290 இந்தியர்கள் சிறப்பு விமானம் மூலம் புதுதில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

ஈரானில் உள்ள இந்தியர்கள் நாடு திரும்ப விரும்பினால் அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பாக்தாத்தில் உள்ள இந்திய தூதரக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்காக வெளியுறவுத்துறை அமைச்சகத்துடன் இணைந்து இந்திய தூதரக அலுவலகம் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையை தொடங்கியுள்ளது.

ஈரானில் உள்ள இந்தியர்கள் அவசர உதவி தேவைப்பட்டால்,

9 8 9 1 2 8 1 0 9 1 1 5 மற்றும்

9 8 9 1 2 8 1 0 9 1 0 9 என்ற தொலைபேசி எண்ணிலும்,

9 8 9 0 1 0 4 4 5 5 7 மற்றும்

9 8 9 0 1 5 9 9 3 3 2 0 என்ற வாட்ஸப் எண்ணிலும் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியாவுடன் நீண்டகால ஒத்துழைப்புக்கான மாஸ்கோ செயல் திட்டம் விரைவில் இறுதிப்படுத்தப்படும் என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தின் கூட்டத்தில் நேற்று பேசிய அவர், இந்தியா உள்ளிட்ட ரஷ்யாவின் முக்கியமான நட்பு நாடுகளுடன் நீண்டகால பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்களை ரஷ்யா முன்னெடுத்து வருவதாக கூறினார்.

பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றமானது நாடுகளுக்கு இடையே பல்வேறு விஷயங்களை பகிர்ந்துகொள்வதற்கு அமைக்கப்பட்டுள்ள மன்றம் என்றும், இது வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் சார்பில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கலந்துகொண்டார்.

இரண்டு சிறப்பு அமர்வுகளில் உரையாற்றிய அமைச்சர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவின் முன்னேற்றங்களையும், நெறிமுறைகளை உள்ளடக்கிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வையையும் எடுத்துரைத்தார்.

<<<<>>>>

ஈரானில் உள்ள அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலால் அணு மாசு ஏற்படும் அபாயம் எழுந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமையின் தலைமை இயக்குநர் திரு. ரஃபேல் குரோசி எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல், ஈரான் அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு கதிர்வீச்சி வெளியாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஈரான் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலையடுத்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தில் பேசிய திரு. ரஃபேல் குரோசி, ஆல்ஃபா துகள்களைக் கொண்ட கதிர்வீச்சை நுகர்ந்தாலோ அல்லது உட்கொண்டாலோ அது, பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம், கிழக்கு உத்தரப்பிரதேச வடகிழக்கு மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம், சத்தீஸ்கட், ஜார்கண்ட், அந்தமான் நிகோபார் தீவுகள், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மாநிலங்களிலும், கிழக்கு ராஜஸ்தானிலும் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா, லட்சத்தீவு, கடலோர கர்நாடகம் மற்றும் ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மாநிலங்களிலும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் நேற்று பல்வேறு மாவட்டங்களில் மிதமான மழை பெய்துள்ளது.

காஞ்சிபுரத்தில் நேற்றிரவு பெய்த மழையால் சென்னை – பெங்களூரு நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 113 அடியாக இருந்தது.

அணைக்கு நீர்வரத்து 18 ஆயிரத்து 220 கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும், கேரள மாநிலம் வயநாட்டிலும் பலத்த மழை பெய்து வருவதால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதன் காரணமாக அந்த அணைகளில் இருந்து காவிரியில் வினாடிக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

லீட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கிய இப்போட்டியில் முதல் இன்னிங்சில் இந்தியா முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 359 ரன் எடுத்தது.

கேப்டன் ஷுப்மன் கில் 127 ரன்னுடனும், ரிஷப் பந்த் 65 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக ஜெய்ஸ்வால் 101 ரன்னும், கே.எல். ராகுல் 42 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

<<<<>>>>

ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 87 புள்ளி எட்டு எட்டு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து இரண்டாவது இடத்தையும், பிரேசிலின் **Luiz Mauricio Da Silva** 86 புள்ளி ஆறு இரண்டு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து 3வது இடம் பிடித்தனர்.

<<<<>>>>

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்திய ஆடவர் அணி இன்று பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**